DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | குமார் |
| Father's Name | : | குண்டன் |
| Village | : | ஆம்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | தனியார் |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 28th day of March 2025.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது ஆம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன வேலு எனது சித்தி மகன் ஆவார். கடந்த 15.03.2021 அன்று நான் எனது வீட்டில் இருந்த போது மதியம் 11.00 மணிக்கு ஊரில் உள்ளவர்கள் எனக்கு போன் செய்து எனது தம்பி இறந்து விட்டதாக தகவல் சொன்னதின் பெயரில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவரின் கை, தலை ஆகிய பகுதிகளில் அடிபட்டிருந்தது. பேருந்து ஒன்று கல்லூரி அருகே விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். பிரேத விசாரணையில் நான் கலந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

இவ்வழக்கு சம்பந்தமாக உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். யாருடைய அஜாக்கிரதையினால் விபத்து ஏற்பட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :-</u>**

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | வெங்கடேசன் |
| Father's Name | : | செல்வராஜ் |
| Village | : | ஆம்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | மேஸ்திரி |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 28th day of March 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது ஆம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன வேலு எனது தம்பி ஆவார். கடந்த 15.03.2021 அன்று காலை 10.30 மணியளவில் நான் எனது ஊரில் இருந்த போது எனது தம்பி இறந்து விட்டதாக தகவல் வந்ததன் பெயரில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

இவ்வழக்கு சம்பந்தமாக உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். யாருடைய அஜாக்கிரதையினால் விபத்து ஏற்பட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.